## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் பெனின் -ல் உள்ள போர்ட் நோவோ பள்ளிவாசலில் 25.04.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

*தஸஹ்ஹுத், தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:*

இன்று அல்லாஹ்வின் அருளால் போர்ட் நோவோ -ல் உள்ள இந்த பள்ளிவாசலில் நாம் ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றுகின்றோம். மக்கள் அதிகமாக ஒன்றுகூடுவதற்காக இந்த அழகிய, விரிவான பள்ளிவாசலைக் கட்ட அல்லாஹ் நமக்கு தஃபீக் வழங்கியுள்ளான். கடந்த முறை நான் சுற்றுப் பயணத்தில் வந்த சமயத்திலும் இந்த பகுதியில் ஒரு அழகான பெரிய பள்ளிவாசலைத் திறந்து வைத்தேன். உலகின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு நகரத்திலும் பள்ளிவாசல்களை கட்டுவதற்கான நற்பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்கி வருகின்றான். இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீதுள்ள அவனது மாபெரும் அருளாகும். ஆப்பிரிக்காவிலுள்ள மற்ற பகுதிகளிலுள்ள சிறு சிறு கிராமங்களில் கூட பள்ளிவாசல்கள் கட்டடப்பட்டு வருகிறது. பெரும் நகரங்களிலும் பள்ளிவாசல்கள் கட்டடப்பட்டு வருகிறது. இவ்வாறே ஐரோப்பாவிலும் ஏனைய மேற்கத்திய நாடுகளிலும் அல்லாஹ்வின் அருளால் பள்ளிவாசல்கள் கட்டடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு இடத்திலும் ஜமாஅத் பெரும் தியாகங்கள் செய்தே பள்ளிவாசல்களைக் கட்டி வருகிறது. அஹ்மதிய்யா ஜமாஅத்திடம் எண்ணெய் வளம் இல்லை. வேறு வழிகளிலும் நமக்கு செல்வங்கள் கிடைக்கவில்லை. ஆனால், ஈமானின் செல்வம் இருப்பதால் அஹ்மதிகள் தியாகங்களைச் செய்கின்றார்கள். எனவே, இந்த செல்வத்தை நீங்கள் எப்போதும் பாதுகாக்க வேண்டும் என்பதை நீங்கள் எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். இது எத்தகைய மகத்தான விலை மதிப்புள்ள கருவூலமாக இருக்கின்றதென்றால் இதனை உங்களிடமிருந்து பிடுங்குவதற்காக நீங்கள் செல்லும் ஒவ்வொரு வழியிலும் திருடர்களும் கொள்ளைக்காரர்களும் அமர்ந்து இருக்கின்றார்கள். இவர்களிடமிருந்து நமது இரவுகளும் பாதுகாப்பாக இல்லை. நமது பகல்களும் பாதுகாப்பாக இல்லை. மாறாக, இந்த கொள்ளைக்காரன் ஷய்த்தானின் வடிவத்தில் நமது இரத்தத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மை இது விஷயமாக எச்சரித்துள்ளார்கள். ஷய்த்தான் உங்களது இரத்த நாளங்களில் ஓடிக் கொண்டிருக்கின்றான். அவனிடமிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆதம் படைக்கப்பட்ட சமயத்தில் மனிதர்களை வழிதவறச் செய்வேன் என ஷய்த்தான் உடன்படிக்கை செய்துள்ளான் என்பதை எப்போதும் நீங்கள் நினைவில் வைக்க வேண்டும். ஈமானின் செல்வம் எப்படிப்பட்ட செல்வம் என்றால் அதை பாதுகாப்பதுதான் எல்லாவற்றையும் விட கடினமான வேலையாக இருக்கின்றது என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள். மற்ற உலகச் செல்வங்களைப் பாதுகாப்பதற்காக, பாதுகாப்பிற்குத் தேவையான உலகப் பொருட்கள் மூலம் அதை உங்களால் பாதுகாக்க முடியும். பூட்டுக்களைப் போட்டு பூட்ட முடியும். காவலர்களை அமர்த்த முடியும். ஆனால், இந்த ஈமானின் செல்வத்தை பாதுகாப்பதற்காக தொடர்ந்து உங்களது நஃப்ஸை தூய்மைப்படுத்தும் முயற்சியில் நீங்கள் ஈடுபட வேண்டும். ஈமானின் செல்வத்தைப் பாதுகாப்பதற்காக இறைவழியில் தொடர்ந்து முயற்சி செய்து இறைவனின் அருள்களை தேட வேண்டியதுள்ளது. அவனது அருள் இல்லையென்றால், ஒவ்வொரு பாதையிலும் மனிதனை தவறான வழியில் கொண்டு செல்ல ஷய்த்தான் அமர்ந்துள்ளான். அல்லாஹ் மனிதனை எந்த இயல்பில் படைத்துள்ளான் என்றால் அந்த இயல்பின் காரணமாக அவன் உலக விஷயங்களின் பக்கமும் பேராசையின் பக்கமும் குனிந்து கொண்டே இருப்பான் என்பதை ஷய்த்தான் ஆரம்ப நாளிலேயே கூறி விட்டான். அவன் நான் கூறுவதைத்தான் ஏற்றுக் கொள்வான்.

மனிதனின் தற்காலிக விருப்பங்களும் உலக ஆசைகளும் அல்லாஹ்வை விட்டும் அவனை வெகு தொலைவில் கொண்டு சென்று விடும் என்று ஷய்த்தான் அறிவித்துள்ளான். இதன் காரணமாக பெரும்பாலான மனிதர்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தாதவர்களாக ஆகி விடுவார்கள். தங்களது ஈமானை வீணாக்குகின்ற அப்படிப்பட்ட நன்றி செலுத்தாத அடியார்களை கொண்டு நான் நரகத்தை நிரப்பி விடுவேன் என்றே அல்லாஹ் ஷய்த்தானிடம் கூறியுள்ளான். எனவே, ஒரு நம்பிக்கையாளருக்கு இந்த உலகம் எப்படிப்பட்டதாக இருக்கின்றதென்றால் அதில் மிகவும் எச்சரிக்கையாக மிகுந்த கவனத்துடன் நமது ஒவ்வொரு அடிகளையும் எடுத்து வைக்க வேண்டியதுள்ளது. நமது ஈமானை நாம் பாதுகாக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது. அல்லாஹ்வின் முன்பு குனியாமல் ஈமானை பாதுகாப்பது சாத்தியமற்றதாகும்.

எனவே, ரஹ்மானின் அடியாராக மாற வேண்டியது ஒவ்வொரு அஹ்மதியின் கடமையாக இருக்கின்றது. நமக்கு எண்ணற்ற அருட்கொடைகளை வழங்கியுள்ள அந்த ரஹ்மானான இறைவன் முன்னால் குனிபவர்களாக நீங்கள் ஆகி விடுங்கள். இன்று அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள இந்த அழகிய பள்ளிவாசலும் இறைவனின் அருட்கொடைகளில் ஒரு அருட்கொடையாகத் திகழ்வதை நாம் பார்க்கின்றோம். இந்த அழகிய பள்ளிவாசல் கட்டப்பட்டதன் நோக்கமும் ஒவ்வொரு பள்ளிவாசலின் நோக்கமும் தனித்திருக்கும் அந்த ஏக இறைவனை வணங்குவதற்காக நாம் ஒன்று கூடுவதேயாகும்.

இந்த பள்ளிவாசலை எப்போதும் நிரப்புவதன் பக்கம் கவனம் இருப்பதுதான் இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்குள்ள ஓர் மிகப்பெரும் வழியாக இருக்கின்றது. ஜமாஅத்தின் ஒவ்வொரு பள்ளிவாசலும் நிரம்பியிருக்கின்ற காட்சியை நாம் காண வேண்டும். பள்ளிவாசலை நிரப்புவது என்றால் என்ன? அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக ஐந்து வேளையும் பள்ளிவாசலுக்கு வருவதுதான் பள்ளிவாசல்களை நிரப்புவதாகும். அல்லாஹ்வை வணங்குவதில் உயர்வான தரத்தை நிலைநாட்டுவதற்காக நாம் பள்ளிவாசலுக்கு வர வேண்டும். சாதாரணமாக தனியாக தொழுவதைவிட பள்ளிவாசலுக்கு வந்து ஜமாஅத்தாக தொழுவதன் மூலம் 27 மடங்கு அதிகமாக நற்கூலி கிடைக்கும் என்று நபிமொழியில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் முழுக்க முழுக்க இறைவனை வணங்குவதற்கான மட்டுமே பள்ளிவாசல்களில் ஒன்றுகூட வேண்டும் என்ற நிய்யத்தில் பள்ளிவாசலுக்கு வரும்போதுதான் பள்ளிவாசல்களைக் கட்டுவதற்காக உரிமையை நிறைவேற்றியவர்களாக நாம் ஆக முடியும். இதன் மூலமே உண்மையான நற்கூலியை நாம் பெற முடியும். அப்போதுதான் ஒரு நம்பிக்கையாளர் தனது படைப்பின் நோக்கத்தை நிறைவேற்றியவர் என்று கூறப்படுவார். அல்லாஹ் திருக்குர்ஆனில் وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ (51:57) ***நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காக மட்டுமே படைத்துள்ளேன்*** என்று கூறியுள்ளான்.

எனவே, ஒருவர் புகழ்பெற்ற பெரிய மனிதராக இருந்தாலும் சரி அல்லது பணக்காரராக இருந்தாலும் சரி அல்லது ஏழையாக இருந்தாலும் சரி இப்படிப்பட்ட இரு தரப்பு மக்களின் படைப்பின் நோக்கமும் அவர்கள் இறைவனை வணங்குவதேயாகும் என்று அல்லாஹ் கூறியுள்ளான். பணக்காரர்கள், ஏழைகள் ஆகிய எல்லாரும் ஓரிடத்தில் ஒன்றுகூட வேண்டும் என்பதற்காகவே பள்ளிவாசல்கள் இருக்கின்றன. எனவே, எல்லாவிதமான உலக துக்கங்களையும் ஒருபுறம் வைத்து விட்டு அல்லாஹ்வை வணங்குவதற்காக நீங்கள் அணியாக நிற்க வேண்டும். அதன் மூலம் ஒரே உயிராகவும் ஒரே ஜமாஅத்தாகவும் நீங்கள் அனைவரும் ஆகி விடுவதுடன் ஒன்றாக சேர்ந்து இறைவன் முன்னால் குனிந்து அவனது அருள்களைத் தேட முடியும். இவ்வாறு நீங்கள் ஒரே உயிராக மாறி இறைவனை வணங்கும்போது இறைவனது அருள்களின் மழையும் முன்பை விட அதிகமாக பொழியும். அதனால் அப்படிப்பட்ட இறைவணக்கங்களுக்கான நற்கூலியை அல்லாஹ் 27 மடங்கு

அதிகமாக்கி வழங்குகின்றான். நான் இவருடன்தான் தொழுகையில் நிற்பேன் அல்லது இந்த நபர் இப்போதுதான் பைஅத் செய்துள்ளார். எனவே இவருடைய தகுதி என்னை விட குறைவானதாக இருக்கின்றது என்பவை உங்களது உள்ளத்தில் வந்து விட்டால் நீங்கள் பள்ளிவாசலுக்கு இறைவனை வணங்குவதற்காக வந்தும் கூட இந்த நற்கூலியைப் பெற தகுதியற்றவர்களாக ஆகி விடுவீர்கள்.

பள்ளிவாசல்களில் வந்து தொழுபவருக்கு 27 மடங்கு நற்கூலி கிடைக்கும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தாலும், *இன்னமல் அஃமாலு பின்னிய்யாத்* - ஒவ்வொரு செயலுக்கும் அதன் எண்ணத்திற்கு ஏற்பவே கூலி இருக்கின்றது என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள். எண்ணம் நல்லதாக இல்லாமல் வெளிப்படையாக ஒருவர் நல்ல செயலைச் செய்தாலும் அல்லாஹ் அறத்குரிய நற்கூலியை வழங்காமல் தடுத்து விடுகின்றான். எனவே, ஒவ்வொரு செயலைச் செய்யும் போதும் எண்ணம் நல்லதாக இருந்தால்தான் அதற்கு நற்கூலி கிடைக்கும். அல்லாஹ் திருக்குர்ஆனில் فَوَيْلٌ لِّلْمُصَلِّيْنَ (107:5) இப்படிப்பட்ட தொழுகைகளை தொழுபவர்களுக்கு அழிவுதான் என்று கூறியுள்ளான். அவர்களுக்கு ஏன் அழிவு ஏற்பட்டுள்ளது என்றால் அவர்கள் தொழுகையின் அசல் நோக்கத்தை மறந்து விடுகின்றார்கள். அவர்களில் ஒருவருக்கும் மற்றவர்களுக்குமிடையில் நல்ல உணர்வுகள் இருப்பதில்லை. உலகம் தொடர்பான எண்ணங்கள் அவர்களது மூளையில் வந்து கொண்டேயிருக்கும். எனவே, தொழுகையிலிருந்து பலன் பெறுவதற்கு உங்கள் எண்ணங்களை தூய்மையாக வைத்திருப்பது அவசியமானதாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்த தொழுகையில் ஒருவரது உள்ளம் ஒரு புறத்திலும் அவரது எண்ணம் வேறு பக்கமும் இருக்கின்ற நிலையில் எதையோ கூறும் வகையில் அவரது தொழுகை இருந்தால் அந்த தொழுகை அவருக்கு சாபமாகும். அந்த தொழுகை அந்த மனிதனின் முகத்திலேயே வீசி எறியப்படும். அது ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

எந்த தொழுகையில் இன்பம் ஏற்படுகின்றதோ அந்த தொழுகையே உண்மையானதாகும். அப்படிப்பட்ட தொழுகையின் மூலமே பாவங்களின் மீது வெறுப்பு ஏற்படுகின்றது. இப்படிப்பட்ட தொழுகை தொடர்பாகவே தொழுகை நம்பிக்கையாளர்களின் மிஃராஜாக இருக்கின்றது என்று புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றது. தொழுகை நம்பிக்கையாளர்களின் முன்னேற்றத்திற்குரிய வழியாக இருக்கின்றது. எனவே, இப்படிப்பட்ட தொழுகைகளை நாம் தொழ முயற்சி செய்ய வேண்டும்.

எனவே, இப்படிப்பட்ட தொழுகைகளை தொழும் எண்ணத்தில் நாம் பள்ளிவாசல்களுக்கு வர வேண்டும். நமது சுய முன்னேற்றமும் ஜமாஅத்தின் முன்னேற்றமும் அல்லாஹ்வின் அருளால்தான் நடைபெறும் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள். அல்லாஹ்வின் அருள்களைப் பெறுவதற்கு அல்லாஹ் கூறியிருப்பது போன்றே உங்களது படைப்பின் நோக்கத்தை எப்போதும் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். பள்ளிவாசல்களில் ஒருபோதும் நாம் உலக விஷயங்களை பேசக்கூடாது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அல்லாஹ்வின் திருப்தியை மட்டும் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக மட்டும் ஒருவர் பள்ளிவாசலுக்கு வருவதாக இருந்தால் மற்றவரைப் பற்றிய தீய எண்ணம் அவரது உள்ளத்தில் இருந்தாலும் அதனை அகற்றுவதற்கு அவர் முயற்சி செய்வார். இந்த தொழுகை மற்றும் இறைவணக்கங்களின் அருளால் பள்ளிவாசல்களுக்கு வெளியிலும் அன்பு, நேசம், ஒருவர் மற்றவரைப் பற்றி கருத்தில் கொள்வது ஆகிய விஷயங்களின் பக்கம் அவருக்கு கவனம் ஏற்படும். உள்ளத்தில் ஏற்படும் வெறுப்பு, காழ்ப்புணர்ச்சி ஆகியவற்றிலிருந்து இரட்சிப்பு

கிடைத்து விடும். எனவே இந்த நிய்யத்தில் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டால்தான் அதற்கு நற்பலன்கள் கிடைக்கும். நாம் நமது உள்ளங்களை இறைவனுக்காக தூய்மையாக வைத்திருப்போம் என்ற எண்ணத்தில் நாம் பள்ளிவாசல்களுக்கு செல்ல வேண்டும். அவ்வாறில்லை யென்றால், உலகில் எண்ணற்ற பள்ளிவாசல்களை நாம் பார்க்கின்றோம். அங்கு நடைபெறும் குத்பாக்களில், குத்பா கொடுப்பவர் மற்ற பிரிவுகளைப் பற்றி ஏசுவதிலும் தீய சொற்களை கூறுவதிலும் ஈடுபட்டிருப்பதைத் தவிர வேறு எதையும் செய்வதில்லை. உலகிலுள்ள பல பள்ளிவாசல்களில் ஜமாஅத்திற்கு எதிராக குறி வைத்து ஏச்சுப் பேச்சுக்கள் கூறப்படுகின்றது. பிறகு பள்ளிவாசல்களுக்கு உள்ளேயே இரு பிரிவினர்கள் சண்டை போடுவதை நாம் பார்க்கின்றோம். இந்த சண்டைகளில் எந்த அளவு வரம்பு மீறப்படுகின்றது என்றால் இறுதியில் அரசாங்கம் இதில் தலையிட்டு பள்ளிவாசல்களுக்கு பூட்டு போடுகின்ற நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட பள்ளிவாசல்கள் நற்கூலியைப் பெற காரணமாக இருக்கின்றதா? இப்படிப்பட்ட மக்கள் அல்லாஹ்வின் வெறுப்பிற்கு காரணமானவர்களாக ஆகி விடுகின்றார்கள்.

எனவே, பள்ளிவாசல்களை அழகாக கட்டுவது மட்டும் மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒரு விஷயம் அல்ல. உண்மையான மகிழ்ச்சியைப் பெற வேண்டுமென்றால் அழகான உள்ளங்களை உடையவர்கள், நல்லெண்ணம் கொண்டவர்கள், அன்பையும் நேசத்தையும் பரப்பக்கூடியவர்கள், முழுமையான தூய்மையுடன் இறைவனை வணங்கக்கூடியவர்கள் ஆகிய நற்பண்புகளைக் கொண்ட தொழுகையாளிகளை நீங்கள் உருவாக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வருகையின் நோக்கமும் அடியானை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்வதேயாகும் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள். மேலும் ஒருவருக்கொருவர் சகோதரர் என்ற உணர்வை வளர்ச்சியடையச் செய்வதும் அவர்களின் வருகையின் நோக்கமாக இருக்கின்றது. நாம் இந்த நோக்கத்தில் வெற்றி பெற முயற்சி செய்யாமல் இருந்தால் நாம் நம்மை அஹ்மதி என்று கூறிக் கொள்வது எவ்வித நோக்கமுமில்லாத வெற்று வாதமாகி விடும். தக்வாவில் முன்னேறுபவர்கள்தான் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவர்கள் என்று நேற்று மாநாட்டு உரையில் நான் கூறியிருந்தேன். தக்வாவில் முன்னேறுவதற்கு இறைவன் கூறியிருப்பதற்கு ஏற்ப அவனை வணங்குவதும் அவனது படைப்பினங்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதும் அவசியமாகும். எனவே, அஹ்மதிகளாகிய நமக்கு இந்த உரிமைகளை செலுத்துவதன் பக்கம் குறிப்பாக கவனம் இருக்க வேண்டும். காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதற்கு நமக்கு நற்பாக்கியத்தை வழங்கியிருப்பது அல்லாஹ்வின் எத்தகைய மகத்தான அருளாக இருக்கின்றது? எனவே, இந்த அருள்களுக்கு நன்றி செலுத்தியவாறு நமது இறைவணக்கங்களின் தரத்தை உயர்த்த வேண்டியது நமது கடமையாகும். நமக்கிடையில் முன்பை விட அதிகமாக அன்பையும், நேசத்தையும், சகோதர உணர்வையும் வெளிப்படுத்திக் காட்டுவது நமது கடமையாகும். நமது உள்ளங்களை மற்றவர்களுக்காக முற்றிலும் தூய்மையாக வைத்திருப்பது நமது கடமையாகும். புதிதாக பைஅத் செய்பவர்களை அன்புடனும் நேசத்துடனும் அரவணைத்து உங்கள் பக்கம் ஈர்ப்பது உங்கள் கடமையாகும். இந்த எல்லா விஷயங்களையும் நாம் செய்யவில்லையென்றால் இது மிகப்பெரும் துர்பாக்கிய நிலையாக இருக்கும். ஒவ்வொரு அஹ்மதியும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். அவர்களது அமர்வதும், எழுவதும், தூங்குவதும், விழிப்பதும், வாழ்வும், மரணமும் எல்லாமே இறைவனது திருப்தியைப் பெறுவதற்காகவே இருந்தது. எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை பின்பற்றும்போதுதான் நாமும் உண்மையான நம்பிக்கையாளராக ஆக முடியும் என்பதை எப்போதும் மனதில் பதித்து வைத்துக் கொள்ள வேண்டும். நமது ஒவ்வொரு செயலும் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக செய்யப்படும்போதுதான் நமது

இறைவணக்கங்களும் நமது மற்ற செயல்களும் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும். இதனால் நமது சுற்றுச்சூழலிலும் அமைதி ஏற்படும். மற்றவர்களுக்கும் நாம் உண்மையான அமைதியையும் உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியையும் வழங்குபவர்களாக ஆகி விடுவோம். நமது தப்லீகிலும் நமக்கு வெற்றி கிடைக்கும். நாம் அல்லாஹ்வின் அருட்கொடைகளை முன்பை விட அதிகமாக பெறக் கூடியவர்களாக ஆகி விடுவோம்.

அல்லாஹ் இந்த பள்ளிவாசலை இங்குள்ள ஜமாஅத்திற்கு எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்கி வைப்பானாக! நாம் இந்த பள்ளிவாசலை கட்டியதற்காக அதன் சிறந்த நற்பலன்களை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக!

இப்போது அமைப்பு ரீதியான ஒரு விஷயம் தொடர்பாக நான் உங்களுக்கு கூற விரும்புகின்றேன். அது கிளை அமைப்புகளுடன் தொடர்புடையதாகும். அதாவது அன்ஸார்களும், குத்தாம்களும், லஜ்னாவும் தங்களுக்குள்ள பொறுப்புகள் தங்களது அமைப்பின் எல்லைக்குட்பட்டே இருக்கின்றது என்பதை நினைவில் வைக்க வேண்டும்.

அன்ஸாருல்லாஹ் கிளை அமைப்பு குத்தாம், லஜ்னா ஆகியோரது நிகழ்ச்சிகளிலும் ஜமாஅத் நிகழ்ச்சிகளிலும் தலையிடாமல் இருக்க வேண்டும். இவ்வாறே குத்தாம்களும் லஜ்னாவும் தத்தமது எல்லைக்குள் இருந்தவாறு தமது பணிகளை செய்ய வேண்டும். ஜமாஅத் அமைப்பானது இந்த எல்லா கிளை அமைப்புகளை விடவும் மேலானதாகும். கிளை அமைப்புகள் தங்களது விவகாரங்களில் நேரடியாக காலத்தின் கலீஃபாவின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். ஆனால், கிளை அமைப்புகள் தங்கள் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு முன்பாக அதைப் பற்றி ஜமாஅத்தின் அமீரிடம் ஆலோசனை செய்து கொள்ள வேண்டும். அதன் மூலம் அவர்களது நிகழ்ச்சிகளுடன் ஜமாஅத் நிகழ்ச்சிகளுக்கு (நேரத்தின் அடிப்படையில்) எவ்வித மோதலும் ஏற்படாமல் தவிர்க்கலாம். இரண்டாவது நினைவில் வைக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், கிளை அமைப்புகளில் உறுப்பினராக இருக்கின்ற ஒவ்வொருவரும் ஜமாஅத்திலுள்ள நபராகவும் இருப்பதால் ஜமாஅத் அமைப்பிற்கும் அவர் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

நீங்கள் அனைவரும் அன்புடனும், நேசத்துடனும் இருக்க அல்லாஹ் அருள் செய்வானாக! உங்களுக்கிடையில் 'தான்' என்ற அகம்பாவம் எவரிடமும் வராமல் இறைவனது திருப்தியைப் பெறுவதே உங்களது நோக்கமாக இருக்கட்டுமாக! ஆமீன்.

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT PORT NOVO, BENIN**
**ON 25.04.2008**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**